# ‘காஜி மியான்’ -புத்தகங்களுக்கு வெளியில் வாழும் வரலாறு

சஃபி

கஜினி முகம்மது சோமநாதா ஆலயத்தின் மீது நிகழ்த்திய படையெடுப்பைப் பற்றியும், அங்கிருந்த செல்வங்கள் சூறையாடப் பட்டது குறித்தும் வரலாற்றுப் புத்தகங்களில் படித்திருக்கிறோம். 1026 ஆம் ஆண்டு நிகழ்ந்த அந்தப் படையெடுப்பானது பலநூற்றாண்டுகள் கடந்தும், மதச்சார்பு கொண்டு எழுதப்பட்ட வரலாறுகளிலும், அரசியல் பேச்சுக்களிலும் துண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மீண்டும் மீண்டும் நினைவு கூரப்படுகிறது. கஜினி முகம்மது பல படையெடுப்புகளை நிகழ்த்தியிருந்தாலும், அவரின் சோமாநா தா படையெடுப்புதான் இந்துக்களை தலை குனிய வைத்த, இந்தியாவை அந்நியர்களிடம் அடிமையாக்கிய, இந்தியர்களுக்கு களங்கத்தை ஏற்படுத்திய முக்கியமான ஒரு படையெடுப்பு என்று அழுத்தம் கொடுத்து நமது சமகாலத்திய வரலாற்றில் பேசப்பட்டுக் கொண்டே வருகிறது .கஜினி முகம்மதின் அந்தப் படையெடுப்பைப் பற்றிய நினைவுகள் ஏதோவொரு வகையில் உயிர்ப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த வரலாற்று நினைவுகளுக்கு உருக்கொடுக்கும் விதமாக 1990 ல் அத்வானியின் ரத யாத்திரை குஜராத்திலிருக்கும் சோம்நாத் ஆலயத்திலிருந்துதான் தொடங்கப்பட்டது. அதன் தொடர் விளைவாக 1992ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது சமீபத்திய வரலாற்றில் படிந்து விட்ட பெரிய கறையாகும்.

ஒரு பக்கம் இந்து மதவாதிகளால் உருவாக்கப்படும் வரலாறுகளில் கஜினி முகம்மது எதிர்மறையாக சித்தரிக்கப்பட்டால், இன்னொரு பக்கத்தில் சோமாநாதா படையெடுப்பு சம்பந்தப்பட்டு ஏராளமான து ருக்கிய பாரசீக ஆவணங்கள் நூறாண்டுகள் கடந்தும் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளில் கஜினி முகம்மது அவர் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியை ஸ்தாபித்த ஓர் ஆதர்சமான இலட்சிய இஸ்லாமிய அரசர் என்றும், இஸ்லாமிய மார்க்கத்துக்கு புறம்பாக கருதப்படும் விக்கிரக ஆராதனையை சோமநாதா ஆலயப் படையெடுப்பில் முறியடித்தவர் என்று புகழ்ந்தோதப்படுகிறார். கஜினி முகம்மதைப் படையெடுப்பை இஸ்லாமிய படையெடுப்பின் தொடக்கப்புள்ளியாக குறிப்பிடும் வரலாற்று நூற்கள் கஜினி முகம்மதோடு நெருக்கமான தொடர்புடைய, அவரோடு சம்பந்தப்பட்ட இன்னொரு வரலாற்று க் கதாபாத்திரத்தைப் பற்றி குறிப்பிடாது விட்டு விடுகின்றன. கஜினி முகம்மது ஒரு முதன்மையான பிரதிநிதியாக முஸ்லிம்களின் படையெடுப்பு குறித்த எதிர்மறைச் சித்திரத்துக்கு வரலாறுகளில் பயன்படுத்தப்பட்டால், அதற்கு மாறாக அவரோடு சம்பந்தப்பட்ட அந்த நபர் எளிமையான வகைபாட் டுக்குள் அடங்காதவராகஇருக்கிறார் வரலாறுகளில் விடுபட்டு அந்தக் கதாபாத்திரம் கஜினிமுகம்மதின் சகோதரி மகனான காஜி மியான் (Ghazi Miyan என்பவராவார்). காஜி மியானைப் பற்றிய தகவல்கள் வரலாற்றுப் புத்தகங்களுக்குள் ஏறாதவை ஆனால் அவரைப் பற்றிய குறிப்புகள் வெகு ஜனங்களின் மனங்களில் வாழும் கதைப்பாடலாக இருந்து வருகிறது. அடித்தட்டு மக்களின் கலாச்சார வழக்கு என்று ஓரங்கட்டுப் பட்டு வந்த காஜிமியான் சம்பந்தப்பட்ட பாடல்களை குறித்து நவீன வரலாற்றாசிரியர்கள் கவனம் குவித்து சமீபத்தில் ஆய்வு செய்திருக்கிறார்கள். காஜிமியானின் கதைப்பாடல் வழியாக, வெகுஜன மக்கள் குறிப்பாக முஸ்லீம் அல்லாத அடித்தட்டு மக்கள் அவரை ஓர்

இஸ்லாமிய மகானாக, தங்களை காக்கக்கூடிய நாயகராக எண்ணி பாவிப்பதைக் அந்த ஆய்வுகளின் வழியாக நாம் காணமுடிகிறது .வடக்கிந்தியாவின் மீது முஸ்லீம்கள் படையெடுத்தார்கள். இந்துக்களை வெற்றி கண்டார் கள் என்றுதான் வரலாறு நமக்கு போதிக்கப்பட்டிருக்கிறது பரிச்சயமாயிருக்கிறது ஆனால் காஜிமியானைப் பற்றிய சரிதையும், கதைப்பாடல்களும் இந்து முஸ்லிம் என்று இரு தரப்பினரையும் எதிரெதிர் அணிகளில் நிறுத்தி, வரலாற்றை ஒரு மோதல் தன்மையுடன் சித்தரிக்காமல் முற்றிலும் இன்னொரு சாத்தியத்தை சொல்லுவதாக இருக்கின்றன. காஜிமியான் போர் செய்து வெற்றி பெற்றிருந்தாலும், அவரை எதிரியாகக் கருதாமல் அவரது இஸ்லாமிய வித்தியாசத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டதை
காட்டுவதாகத்தான்அந்தவெகுஜனகதைப்பாடல்கள்இருக்கின்றனகாஜி மியான் குறித்து பாரசீக மொழியில் எழுதப்பட்ட சரிதை 'மிராத் - இ- மசூதி' (Mirat-i-Masaudi ,1611) என்பதாகும். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அப்துல் ரஹ்மான் சிஷ்டி என்பவரால் சூஃபி மரபில் எழுதப்பட்டது அச்சரிதையாகும். அது மக்களால் காஜி மியான் என்றழைக்கப்பட்ட சலார் மசூத் (Salar Masud) என்பவரின் பராக்கிரமங்களை புகழ்ந்து கூறும் சரிதையாகும் சலார் மசூத் கஜினி முகமதுடைய சகோதரியின் மகனாவார். அவர் 1014 ஆம் ஆண்டு அஜ்மீர் நகரில் பிறந்தவர். சிஷ்டி என்ற சூஃபி பிரிவைச் சார்ந்த ஞான குருக்களின் வம்சாவளியில் வந்தவர் என்று அச்சரிதை சொல்கிறது. அவர் தனது பதின் பருவ தொடக்கத்திலேயே மேற்குக் கங்கையோர சமவெளிப் பகுதிகளின் மீது படையெடுத்து வென்றவர் என்றும், கடைசியாக பஹ்ரெய்ச் நகரில் இராஜபுத்ர அரசர்களோடு நடந்த போரில் கொல்லப்பட்டு அவர் தனது பத்தொன்பதாம் வயதில் வீரமரணம் எய்தினார் என்றும் மிராத் -இ-மசூதி சொல்லுகிறது. கஜினி முகமதின் பல்வேறு செயல்பாடுகளை குறித்து இயற்றப்பட்ட பல நூல்களைத் தழுவி எழுதப்பட்டதாக அந்தச் சரிதை கூறிக் கொண்டாலும் , கஜினி முகம்மதின் அரசவையிலிருந்த முல்லா முஹம்மத் கஜனவி என்பவரால் எழுதப்பட்ட 'தவாரிக் - இ-முகமதி'(Tawarikh-i-Mahmudi) என்ற நூலை அடிப் படையாகக் கொண்டது என்று அப்துல் ரஹ்மான் சிஷ்டி சொல்கிறார். மேலும் தான் எழுதிய சரிதைக்கு உதவியாக பஹ்ரெய்ச்சில் வாழ்ந்த பண்டிதரான பிராமணர் ஒருவரிடமிருந்த சம்ஸ்கிருத ஆவணங்கள் இருந்தன என்று சொல்லி தனது நூலுக்கு அதிகப்படியான நியாயத்தையும் தேடியிருக்கிறார் அப்துல் ரஹ்மான் சிஷ்டி .
கஜினி முகமதின் சோமநாதா படையெடுப்பின் போது அவருடன் சலார் மசூத்தும் போனதாகவும், கஜினி முகம்மது ஆலயத்திலிருந்த சிலையினை தகர்த்த போது கிடைத்த சிதிலங்களை பிராமணர்களுக்கு உண்ணக் கொடுத்த முயற்சியில் சலார் மசூத் முன் வரிசையில் நின்று செயல்பட்டதா கவும் மசூதின்சரிதை சொல்லுகிறது .
அது தவிர மற்ற இஸ்லாம் சம்பந்தப்பட்ட கதைகளில் நீங்காமல் வரக்கூடிய அம்சமான மதமாற்றம் சம்பந்தப்பட்ட குறிப்பும் அச்சரிதையில் இடம் பெறுகிறது .
சலார் மசூத் தனக்கு முன்னால் நின்ற இஸ்லாமிய மதத்தைச் சாராத அந்த அவிசுவாசிகளிடம் 'மதம் மாறுகிறீர்களா அல்லது மரணத்தைத் தழுவுகிறீர்களா ?' என்று கேட்கிறார். ஆனால் அந்த எதிரிகளில் எவரெவர் தங்கள் முன்னாலிருந்த இரு சாத்தியங்களில் எதைத் தேர்தெடுத்தார்கள் என்பதைப்பற்றி அந்நூலில் குறிப்புகளில்லை . மிராத்-இ- மசூதி சொல்லும் வரலாற்றுக் காலகட்டத்தையும் , அதன் உள்ளடக்கத்தையும் குறித்து சில வரலாற்றறிஞர்கள் சந்தேகத்தை எழுப்பியுள்ளனர். மிராத்-இ- மசூதி உருவான காலகட்டத்தைச் சேர்ந்த வேறு சில நூற்கள் அது வரலாற்று ஆவணமல்ல , ஒரு இட்டுக்கட்டப்பட்ட கற்பனையான வரலாறுதான் என்று குறிப்பிடுகின்றன . வேறுசில வரலாற்றாசிரியர்கள் சலார் மசூத் அஜ்மீரில் அடங்கியிருக்கும் காஜா சிஷ்டியுடன் இந்தியாவிற்கு வந்தவராயிருக்கலாம் என அபிப்பிராயப்படுகின்றனர். வேறு சிலர் மசூத்தின் காலம் என்று சொல்லப்படும் பதினோறாம் நூற்றாண்டில் முஸ்லீம்கள் உத்திரப் பிரதேசம் வரை படையெடுத்து அப்பகுதியை கைப்பற்றியிருக்க முடியாது என மசூதின் வரலாற்றை

மறுக்கின்றனர். இப்படியாக சலார் மசூதின் வரலாற்றின் நம்பகத் தன்மை குறித்தும், அதை வரலாற்று உண்மை குறித்தும் கல்வித் துறைக்குள் விவாதங்கள் இருந்தாலும் மத்திய கால வரலாற்றில் நிகழ்ந்த சம்பவத்தை மறந்துவிடாமல் வெகுமக்கள் இன்று வரை உயிர்ப்புடன் மனதில்வைத்திருக்கின்றனர்சலார் மசூதைப் பற்றிய வாய்மொழிப் பாடல்கள்

சலார் மசூதைப் பற்றி எழுதப்பட்ட மிராத் -இ-மசூதி போன்ற புகழ் சரிதை போலவே, அவரைப்பற்றி வாய்மொழியாக வழங்கப்படும் கதைப்பாடல்களும் அடித்தட்டு மக்களிடம் புழங்கி வருகின்றன. அந்தப் பாடல் கள் டஃபாலி (Dafali) என்றழைக்கப்படுகின்ற நாடோடிப் பாடகர்களால் பரவலாகப் பாடப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே பிரிட்டிஷ் ஆய்வாளர்களால் காஜிமியானைப் பற்றிய பல பாடல்கள் சேகரிப்பட்டுள்ளன. மிராத் இ மசூதி சொல்லுகிறபடி இந்தியாவை வெற்றி கண்ட ஓர் இஸ் லாமிய மன்னன் என்பதாக இல்லாமல், அந்த வாய்மொழிப் பாடல்களில் காஜிமியான் ஒரு மார்க்கப் புனிதராக, ஒருதவநெறியாளராகசித்தரிக்கப்படுகின்றார்அம்மாதிரியான ஒரு பாடலானது, தனது மாமாவான கஜினி முகம்மது சோமநாதா படையெடுப்பில் குடிமக்களின் உடமைகள், பொருட்களை மனிதத்தன்மையற்ற முறையில் சூறையாடியதைக் கண்ணுற்ற காஜிமியான், அந்தப் போரின் விளைவுகளைக் கண்டு வெறுத்து மனித குலத்துக்குச் சேவை செய்ய தீர்மானித்துவிடுவதாய்அவரைச்சித்தரிக்கிறதுஅவர் மனதாலும் உடலாலும் தூய்மையானவராக, மிக நேர்மையானவராக நடந்து கொள்ளுகிறார். உயர்சாதியினரின் உணவுப் பழக்கங்களை கடைபிடிக்கிறார். அப்படி அவர் ஒழுங்காக வாழ்ந்து வருவதற்குக் மாறாக, அவரைச் சுற்றியுள்ள இந்து ராஜாக்கள் கொடுங்கோன்மையுடன் ஆட்சி புரிந்து வருகின்றனர். அந்த மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக ஏழைகள், சாமானியர்களின் சார்பாக அந்த ராஜாக்களை எதிர்த்து, நீதிக்காகச் போர் புரிபவராக கதைப்பாடல்களில் வருகிறார் காஜிமியான்.

இந்து ராஜாக்களுக்கு எதிரான போராட்டத்தின் போது காஜி மியான் கொல்லப்படுகிறார். அதுவும் ராஜாவுடனான போரானது காஜிமியானுக்கு திருமணம் நிகழப் போகும் சமயம் பார்த்து தொடங்குகிறது. காஜிமியானும் திருமணத்தை முடித்து விட்டு போருக்குக் கிளம்பலாம் என்று தனது கடமையை ஒத்தி போடாமல், திருமண நிகழ்ச்சியை பாதியிலேயே நிறுத்திவிட்டுப் போர் செய்யக் கிளம்பிப்போகிறார் கடுமையாக நடந்த அந்தப் போரில் காஜிமியான் கொல்லப்பட்டு விடுகிறார். போர்களத்தின் ஏதொவொரு பகுதியில் அவர் கொல் லப்பட்டதாக கதைப்பாடல்கள் சொல்லுவதில்லை. அவருக்குப் பிடித்தமாக இருந்து வந்த சூரியக் கடவுளின் ஆலயத்தில் இருக்கும் தண்ணீர் தொட்டியின் அருகில்தான் அவர் மாண்டுபோய்விடுகிறார். வடக்கிந்தியாவில் காஜி மியானைப்பற்றி பேசப்படும் பல வாய்மொழிக்கதைகளில் காஜி மியானின் திருமண சம்பவந்தான் அடிக்கடி வருகிறது. காஜி மியானுக்கு திருமணம் நடக்கப் போகும் சமயத்தில், ஆயர்குலத் தலைவனான நந்தனின் மனைவியசோதைஅவரைப்பார்க்கவருகிறாள்அவரிடம் ராஜா சோகல் டியோ, சஹர் தேவ் என்ற ராஜாக்கள் தனது பசுக்களையும், தனது இன பந்துக்களின் பசுக்களையும் கொன்று குவிப்பதாக யசோதை புகார் செய்கிறார். அக் கொடுமையைக் கேட்டுச் சினந்து, காஜிமியானும் தனது திருமணச் சடங்குகளை தொடராமல் பாதியிலேயே நிறுத்திவிட்டு பசுக்களைக் காப்பதற்காக போரிடச் செல்கிறார். போரில் மடிந்து விடுகிறார். இந்திய அரசியலில் மதஅடையாளத்தை வரையறுப்பதில் பசுவுக்கு முக்கியமான பங்குண்டு. பசு புனிதமான பிராணி என்றும், அதைக் காக்க வேண்டியது ஒவ்வொரு இந்துவின் கடமை என்றும் இந்து அடையாளம் வரையறுக்கப்படுகிறது. அப்படியான இந்து அடையாளத்துக்கு எதிர் முனையில் மாட்டிறைச்சி உண்ணும் தூய்மையற்றவர்களாக முஸ்லிம்கள் நிறுத்தப்படுகிறார்கள். இந்திய அரசியல் வானில் பசுவை மையமாக வைத்து வடக்கிந்தியாவில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஏராளமான மதக் கலவரங்கள் நிகழ்ந்ததற்கு நம்மிடையே சான்றுகள் உண்டு.

மாட்டிறைச்சி உண்பதை தடுக்கவேண்டியும், அதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக

வீரதீரத்துடன் போரிட வேண்டியது ஓர் இந்துவின் கடமையாகும் என்று சொல்லப்படும் சூழலில், இந்துக்களால் புனிதமாக பூஜிக்கப்படும் பசுக்கள் இந்து ராஜாக்களாலே கொல்லப்படுவதை எதிர்த்து மடிந்த முஸ்லிம் கதாநாயகராக காஜிமியான் இந்தக் கதைப்பாடல்களில் குறிப்பிடப்படுவது கவனங் கொள்ளத்த க்கது. காஜிமியானும் நிறைய பசுக்களை அவரே சொந்தமாக வளர்த்து வந்ததாகவும், கெட்டிக்கார மேய்ச்சல்காரர் எனவும் அந்தப் பாடல்களில் போற்றப்படுகிறார் . இந்தப்பாடல்கள் இடையர்கள் மத்தியிலிருந்து கிளைத்திருக்க வாய்ப்பிருந்திருக்கிறது . இடையர்கள் காஜிமியானை பக்தியுடன் வணங் குவதை நியாயப் படுத்திக்கொள்ளுவதற்கான ஒரு காரணியாக இந்தப்பாடல் அமைந்திருக்கக்கூடும் என்கிறார் ரொமிலா தாப்பர் என்ற வரலாற்றாசிரியர்.

உத்திரப் பிரதேச அவுத் பகுதியிலிருக்கும் ஷியா முஸ்லிம்களின் செல்வாக்கால் வீரமரணம் எய்துதல் என்ற அம்சமும் , வைஷ்ணவ கதை மரபிலிரு க்கும் கால்நடை வளர்த்தல், ஆநிரை கவர்தல் போன்ற அம்சங்கள் காஜிமியான் கதைக்குள் போயிருக்கச் சாத்தியமுண்டு என சில ஆய்வாளர்கள்கருதுகின்றனர் .பஹ்ரெய்ச்சில் இருக்கும் காஜி மியான் சமாதிக்கு , இந்து-முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லாமலும் , பிராமணர்கள் முதற்கொண்டு சாதி வித் தியாசம் பாராமல் எல்லா தரப்பினரும் வருகின்றனர் . தலித் மற்றும் அடித்தட்டு மக்கள் மியானின் சமாதிக்குஅதிகளவில்வருகின்றனர் . டில்லி சுல்தான்களான துக்ளக்குகள் காஜி மியானின் சமாதிக்கு வருகை புரிந்ததாக குறிப்புகள் இருக்கின்றன. உலகப் பயணியான இப்னு பதூதா 1341 ம் ஆண்டு மியானின் சமாதிக்கு விஜயம் செய்த போது அங்கு ஏராளமாகக் குவிந்த பக்தர்களின் கூட்டத்தைப் பற்றி தனது பயணக் குறிப்புகளில் எழுதியிருக்கிறார் .

லோடி வமிசத்தைச் சார்ந்த சிக்கந்தர் லோடி என்பவர் மியானின் சமாதிக்குச் செல்வது இஸ்லாமிய மார்க்கத்துக்கு புறம்பானது என்று சொல்லி அதற்குத் தடை போட்டிருக்கிறார். அந்தத் தடையானது பெரிதாக மக்கள் மத்தியில் செல்லுபடியாகவில்லை. மக்கள் விஜயம் செய்துகொண்டுதான்இருந்தனர் பதினாறாம் நூற்றாண்டில் காஜி மியானின் புகழ் பரவி அவர் சமாதிக்கு விஜயம் செய்வதென்பது ஒரு ஸ்தாபிக்கப்பட்ட மரபாகிவிட்டது இது போக காஜி மியானைப் பற்றிய செய்திகள் தாந்ரீக மரபிலும் ஊடுருவி விட்டன காஜிமியான் சமாதிக்கு போகும் பக்தர்கள் அவரின் நின்று போன திருமணத்தைப்பற்றி மறக்காமல் நினைவு கொள்கிறார்கள். அதன் நினைவாக அவரின் திருமணத்துக்கு தேவைப்படும் பொருட்களை அன்பளிப்பாக எடுத்து க்கொண்டுதான் அவர் சமாதிக்கு சென்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஷகீத் அமீன் என்ற வரலாற்றாய்வளரும் காஜி மியானைப் பற்றி விரிவாக 1990களில் களப்பணி புரிந்து ஆய்வுகள் பண்ணியிருக்கிறார் . வரலாற்றில் இஸ்லாத்தைப்பற்றி பொதுவாக இருவிதப் பார்வைகள் நிலவுகின்றன மதத்தைப் பரப்புவதற்காக வாளோடு வந்த மதம் இஸ்லாம் என்பது ஒரு வரலாற்றுப் பார்வை அதற்கு இணையாக சூஃபி மகான்களின் எளிமையான தூய்மையான, அடித்தட்டு மக்களோடு ஐக்கியமாக வாழ்ந்த வாழ்வினால் இஸ்லாம் பரவியது என்பது இன்னொரு பார்வை . இந்த இரு வரலாற்றுப் பார்வைகளுக்குள்ளும் அடங்காமல் மூன்றாவது சாத்தியத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வைக்கும் நிலையில் காஜிமியான் பற்றிய வரலாற்றுக் கதை இருக்கிறது என்கிறார் அவர். முதல் பார்வைக்கு பிரதிநிதியாக கஜினி முகமது இருக்கிறார் . வாளோடு வந்த இஸ்லாம் என்ற சித்திரத்துக்கு பொருந்தும் வகையில் படையெடுத் து, பொருட்களை சூறையாடி வடக்கிந்தியாவை வெற்றிகொள்கிறார் கஜினி முகம்மது .

ஷகீத் அமீனைப் பொறுத்தவரை காஜி மியான் கதை ஓர் இஸ்லாமியக்கதை காஃபிர்களான முஸ்லிம் அல்லாதவர்களுக்கு , இந்திய அம்சங்களை கலந்து சொல்லப்பட்ட ஒரு நாட்டுப்புற வரலாற்றுக் கதையாகும். காஜி மியான் கதை ஒரு வீரப்புனிதரின் (Warrior saint ) கதையாகும். கதை இரு தளத்தில் இயங்குகிறது . இஸ்லாத்துக்காக படையெடுப்பதும் ,

இஸ்லாமிய மரபுப்படி ஷகீத் என்ற சொல்லப்படுகின்ற வீரமரணத்தை எய்துதலும் ஒருதளத்தில் நடக்கிறது. இன்னொரு தளத்தில் அதன் உள்ளடுக்காக இந்து ராஜாவை எதிர்த்து இடையர்களுக்காக பசுக்களைக் காப்பாற்ற வேண்டி நீதியை நிலைநாட்ட காஜிமியான் உயிர்விடுவதும்கதைக்குள்ளோடுகிறது. காஜிமியான் கதையை இஸ்லாத்தின் பிரத்யேகமான வித்தியாசத்தை அங்கீகரித்து அதன் அழைப்புக் குரலுக்கு செவிசாய்த்து, இஸ்லாமல்லாதவர்கள் இஸ்லாத்திடமே அபயக்கு ரல் கொடுத்து, அதனிடம் அடைக்கலம் புகுந்தவரலாறாகவும்பார்க்கிறார்ஷகீத்அமீன்மாசவுத் காஜி, காஜி மியான், பேல் மியான், என்று பல பெயர்களுடன் மக்கள் மனதில் இருக்கிறார் கஜினி முகமதின் சகோதரி மகன். செல்லமாக காஜி மாப்பிள்ளை -காஜி துல்கா- என்றும் அவர் பிரியத்துடன் மக்க ளால் அழைக்கப்படுகிறார்.

காஜிமியானைப் பற்றிய மிராத் -இ-மாசவுதி என்ற நூலிலிருந்து ஷகீத் அமீன் எடுத்துக் காட்டிய சிலபகுதிகள்காஜி மியான் புனித நகரான அஜ்மீரில் பிறக்கிறார். அவரின் முகமோ இயேசு பிரானின் முகவிலாசத்தினைப் போலிருக்கிறது. 'இதுவரை எந்த முசல்மான்களின் கைகளுக்கும் விழாத ஒரு தேசத்தினை கையகப்படுத்துவதுதான் தனது விதி' என்ற வைராக்கியத்துடன் வளர்கிறார் காஜிமியான். அவருக்கு இளமையிலேயே எல்லா வித்தைகளும் அத்துபடியாகி விடுகின்றன. சதா உடலைக் கழுவி சுத்தப்படுத்தி 'ஒலுவை' பேணிக்கொண்டிருக்கிறார். உடலும் மனமும் அவருக்கு எப்போதும் பரிசுத்தமாக இருப்பதால் அவர் குளிக்காமல் தொழுதாலும் அவரது பிரார்த்தனையானது தவறாகிவிடாது தூய்மையான ஆடைகள் அணிவதிலும், வாசனைத் திரவியங்களை பூசிக்கொள்வதிலும், சாமான்யர்களிடம் இருப்பதைப் போலவே வெற்றிலை பாக்கு போடும் பழக்கத்திலும் விருப்பமுடையவராக இரு க்கிறார் காஜிமியான்.

காஜி மியான் அப்படி பக்திமானாக, நல்லொழுக்கமுடையவராக இருக்கும் போது அவர் வசித்த பகுதியை ஆளும் இந்து ராஜோவோ சூழ்ச்சியும் நயவஞ்சகமும் மிக்கவராக இருக்கிறார். ராவல் என்னும் நாட்டை ஆண்ட அந்த இந்து ராஜா ஒரு தடவை காஜிமியானுக்கு விருந்துபச்சாரம் பண்ணும் சமயத்தில் 'உங்களுக்காகவென்றே தயாரிக்கப்பட்ட உணவு' என்று சொல்லி உணவில் நஞ்சு கலந்து காஜி மியானை கொல்லப் பார்க்கிறார்.

அதற்கு,' தீர்க்கதரிசிகள் ஒர் இந்துவின் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவை உண்பதில்லை. அதுபோலவே நானும் உங்களது உணவை உண்ணப் போவதில்லை' என்று சொல்லி ராஜாவின் உணவை நிராகரித்து விடுகிறார் காஜி மியான்.

அதைக் கேட்டு ராஜா காஜிமியானிடம், 'சர்க்கரை,அரிசி மற்றும் தேவைப்படும் பொருட்களை எடுத்துக் கொண்டு அவரின் சமையற்காரர்களைக் கொண்டே சமைத்துக் கொள்ளுமாறு' மறுமொழி கூறுகிறார். தனது செய்கையின் மூலம் காஜி மியானின் இஸ்லாமியத் தூய்மையை காப்பாற்றிக் கொள்ளும்படி வாய்ப்பு கொடுத்த அதேசமயத்தில், தனது இந்து ஆசாரத்துக்கும் பங்கம் வராமல் நடந்து கொள்ள முயற்சிக்கிறார் ராஜா. ஆனால் ராஜாவின் அந்த வேண்டுகோளும் காஜிமியானால் நிராகரிக்கப்படுகிறது. அடுத்து, காஜிமியானுக்கு நிறை ய இனிப்பு பதார்த்தங்களை கொடுக்கிறார் அந்த ராஜா. ராஜாவின் செயலில் எதாவது சூட்சுமம் இருக்கக்கூடும் என்பதை இறையருளால் உணர்ந்த காஜிமியான் அந்த இனிப்புகளை வாங்கி நாய்களுக்குப் போடுகிறார். இனிப்புகளைச் சாப்பிட்ட நாய்கள் இறந்து போகின்றன.

ராஜாவின் துர்குணத்தைக் கண்டு கோபமடைந்த மாசவுத், ராவல் நகரைத் தாக்க தொடங்குகிறார். பன்னிரண்டே வயதான் மாசவுத்தின் தலைமையின் கீழ் திரண்ட வீர இளைஞர்கள் ' இறை நம்பிக்கையற்றவர்களின் படைகளை முறியடித்தார்கள். தோல்வி கண்டவர்களின் தலைகளை இஸ்லாமிய வீரர்கள் எல்லா தெருக்களிலும் சிதறியடித்தார்கள் என்று மிராத் -இ-மா சவுதி நூல் கூறுகிறது.

அதன் பிறகு மாசவுத் நேபாள எல்லையையொட்டி இருந்த மலை அடிவாரத்துக்கு

வேட்டைக்கு போகிறார். அங்கே பஹ்ரெய்ச் என்ற இடத்தில் ஒரு சூரியக் கோயிலும் புனிதமான நீர்த்தொட்டியும் இருப்பதைக் கண்டார். அங்கிருந்த பாலருக் என்ற கல்லான விக்கிரத்தின் மேல் தலையை முட்டி மோதி வணங்குவதற்கு பஹ்ரெய்ச்சை சுற்றிலுமுள்ள ஊர்களிலிருந்து ஆண்களும்,பெண்களும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் திரளுவதைக் காண்கிறார் மாசவுத். அப்படி சிலை வணக்கத்தை கண்ணுற்ற மாசவுத், இறை நம்பிக்கையற்றவர்கள் வணங்கும் அந்த விக்கிரகத்தை தகர்த்துவிட்டு அவ்விடத்தில் இந்த பிரபஞ்சத்தை படைத்து பரிபாலிக்கும் இறைவனுக்காக ஒரு மசூதியைக் கட்ட முடிவெடுக்கிறார்.

மசூதி கட்டும் முயற்சியில் இறங்கிய மாசவுத்தைக் கண்ட அவ்வூர் பெரியவர்கள் .'இப் பகுதியில் மேன்மையானவர்கள் வாழ்கிறார்கள். நீயோ மேல்நாட்டிலிருந்து வந்திருக்கிறாய். அப்படி மேல்நாட்டிலிருந்து வந்தவர்கள் இங்கு நிலைத்துத் தங்க முடியாது. விவேகத்துடன் யோசித்து செயலில் இறங்கு' என எச்சரிக்கின்றனர்.

காஜி மாசவுத் தனது படை வீரர்களுடன் கலந்தாலோசித்தார். எதிரிகளின் படை பலத்தை எடை போட்டுவிட்டு, பின்பு தயங்காமல் போருக்குத் தயாராகிவிட்டார். பல தடவைகள் அங்கிருக்கும் எதிரிகளுடன் போர் புரிந்தார். போரில் வீர மரணம் எய்திய இஸ்லாமிய வீரர்களின் உடல்களை, சூர்யக் கடவுளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் புனிதமான நீர்த்தொட்டிக்குள் போட்டு அவர் நிரப்பு கிறார். இறைவனுக்கான பாதையில் உயிர் நீத்த அந்த தியாகிகளின் மரணம் அவ்விடத்தில் சூழ்ந்திருக்கும் அஞ்ஞான இருளை அகற்றும் என நம்பி அவர் அக்காரியத்தைச் செய்ததாக மிராத் -இ-மாசவுதி நூல் குறிப்பிடுகிறது.

மாசவுத்துக்கு போரில் இறந்து விடுவோம் என்று உள்ளுணர்வில் தோன்றிவிட்டது. கடைசி யுத்தத்துக்கு முன்பாக மற்றவர்களை அழைத்தார். அவர்களிடம் ' தன்னிடம் மீதமிருக்கும் கம்பளித் தொப்பியும், ஊசியும் எந்தவொரு பிரயோஜனத்தையும் தந்துவிடாது என இயேசுநாதர் கண்டுகொண்டார். என்னிடமிருக்கும் சொத்தினால் நான் என்ன பேறு பெற்றுவிடப் போகிறேன் ' என்று சொல்லி தன்னிடமிருந்த பணம் மற்றும் பிற உடமைகளையெல்லாம் மிஞ்சியிருப்பவர்களிடம் கொடுத்து விட்டு அவைகளை சீக்கிரம் செலவழித்து விடுமாறு கூறுகிறார் மாசவுத்.

அதன் பின் வீர்களை கலைந்து போகச் சொல்லிவிட்டு தனித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபடலானார் உணவையும் நீரையு ம் மற்றவர்களிடமிருந்து இரந்து பெற்றுக் கொண்டார். அதிகளவு வெற்றிலை பாக்கையும் போட்டுக் கொண்டார். வாசனை திரவியங்களையும் நிறைய பூசிக் கொண்டார் அவர்.

சூன் 15,1033ஆம் ஆண்டு ஞாயிற்றுக் கிழமையன்று சகர் டியோ (Sahar Deo), கர் டியோ (Har Deo) என்ற இரு ராஜாக்கள் மற்ற நாட்டுத் தலைவர்களுடன் சேர்ந்து மாசவுத்தின் மீது பெருந்தாக்குதல் தொடுத்தனர். இஸ்லாமியப் படையானது அத்தாக்குதலில் சின்னாபின்னமாகிவிட்டது மாலை தொழுகைக்கான நேரத்தின் போது அம்பொன்று மாசவுத்தின் கரத்தை துளைத்துச் சென்றுவிட்டது. அந்தக் காயத்தினால் அவரின் சூரிய வதனமானது சந்திரன் போல வெளிறிவிட்டது.

உயிர்த் தியாகம் பண்ணும் சமயத்தில் சொல்லும் இஸ்லாமிய இறைவசனங்களைச் சொல்லி மண்ணில் சாய்ந்தார் மாசவுத். சிக்கந்தர் திவானா என்பவரும் மற்றவர்களும் மாசவுத்தை தூக்கிக் கொண்டு சூரியக் கடவுளின் புனிதத்தொட்டிக்கு அருகே இருக்கும் மகுவா மர நிழலுக்கு கொண்டு சென்றனர். மாசவுத்தின் உடலை அங்கிருந்த திண்ணையின் மீது வைத்தனர். திவானா மாசவுத்தின் தலையை தன் மடி மீது வைத்துக்கொண்டனர். மக்கா நகரம் இருந்த மேற்கு திசையை நோக்கி திரும்பிக் கொண்டார் திவானா. உயிர் தியாகம் பண்ணியவர்களின் இளவரசராக விளங் கிய மாசவுத் கடைசியாக கண்விழித்து பெருமூச்சு வாங்கி தனது ஆன்மாவை இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டார். அதைக் கண்டு மிச்சமிருந்த வீர்கள் அழுது புலம்பினர். வாளை சுழற்றிக் கொண்டு எதிரிகளின் படைக்குள் புகுந்தனர். நொடியில் தங்களது வாழ்வை இழந்து விடுகின்றனர்.

மாலைத் தொழுகை நேரம் வந்த போது இஸ்லாமிய வீரர்கள் ஒருவரும் உயிரோடு இருக்கவில்லை.

இந்த வரலாறு நமக்கு நன்கு பரிச்சயப்பட்ட 'வாளோடு வந்த இஸ்லாம்' என்ற கருத்தின் தடத்திலேயே எழுதப்பட்டதாகும். அந்தக் கருத்துக்கு ஊடாக மாசவுத் உணவு சம்பந்தப்பட்ட விஷயத்தில் உயர்சாதியினருக்கு நிகராக தூய்மையைப் பேணுவதும், அதே சமயத்தில் வெற்றிலை பாக்கு போடும் நாட்டுப்புறப் பழக்கத்தை வைத்திருப்பதும், உடமைகளினால் பயனில்லை என்று சொன்ன இயேசுநாதர் பற்றி மாசவுத் பேசுவது போன்ற கலவையான அம்சங்களும் அவரின் கதைக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

ஷகீத் அமீனும் டஃபாலிக்கள் என்றழைக்கப்படும் முஸ்லிம் பாணர்கள் பாடும் காஜி மியான் பற்றிய நாட்டுப்புற பாடல்களை சேகரித்து ஆய்வு பண்ணியிருக்கிறார். இந்த நாட்டுப் புறப்பாடல்கள் எப்போது புழக்கத்துக்கு வந்தன என்பதை நிர்ணயம் செய்வதில் சிரமமிருக்கிறது. ஆனால் டில்லி ஆக்ராவிலிருந்து, உத்திரபிரதேசத்திலிருக்கும் பனாரஸ் வரை சேகரிக்கப்பட்ட பல நாட்டுப் புற பாடல்கள் காஜிமியானைப் பற்றி ஒரு விஷயத்தில் ஒன்று படுகின்றன. அது காஜிமியானின் திருமண நிகழ்ச்சியை பற்றியதாகும். திருமணம் சம்பந்தப்பட்ட நாட்டுப்புறப்பாடல்களில் காஜிமியான் 'இளம் மாப்பிள்ளை' என்ற அர்த்தத்தில் 'காஜிதுல்கா (Ghazi Dulha) என்றே செல்லமாகக் குறிப்பிடப்படுகிறார். மேலும் எளிய நாட்டுப்புற மக்களின் நினைவுகளில் பசுவினத்தையும், இடையர் குலத்தையும் பாதுகாப்பவராகவே காஜிமியான் கருதப்படுகிறார்.

காஜிமியான் திருமணத்துக்கான சிறப்பு முஸ்தீபுகளுடன் குளித்து முடித்து தயாராகிக் கொண்டிருக்கிறார். அந்நேரம் பார்த்து யசோ ராணி - கிருஷ்ணபகவானின் செவிலித்தாயான ராணி யசோதையின் அதே பெயர் - அங்கு வருகிறார். ராணியின் கைகளில் வழக்கமான பரிசாகக் காஜிமியானுக்கு கொண்டு வரக்கூடிய பால் இல்லை. பாலுக்குப் பதிலாக, கொடிய இந்து ராஜாவினால் கொலை செய்யப்பட்ட அவளது கணவரான நந்து மற்றும் இதர இடையர்களின் குருதியினால் நிரப்பப்பட்ட வாளியானது அவள் கையில் இருந்தது.

தான் வென்ற பிரதேசத்தில் வசித்துக் கொண்டிருந்த ஆகிர் என்ற இடையர் குலத்தினரை காஜிமியான் அவர்கள் இஷ்டம் போலவே நடந்து கொள்ள அனுமதித்துவிட்டார். தனகு குடிமக்களான அந்த இடையர்களிடமிருந்து அவர் எதிர்பார்த்ததெல்லாம் ஒவ்வொரு எட்டாவது நாள் அன்று தனக்கு காணிக்கையாக பால் மட்டும் வந்து சேர வேண்டும் என்பதுதான் நிபந்தனையான இருந்தது.

இடையர்களிடமிருந்த அந்த வழக்கத்தைக் கண்டு ராஜா சோகல் டியோ 'ஒரு துருக்கனுக்கு பால் காணிக்கையாக கிடைக்கிறது. சத்ரியனான நானோ உங்களால் அலட்சியப் படுத்தப்படுகிறேன் என்று ஆத்திரப்படுகிறார்.

சோகல் டியோ, காஜிக்கு பால் கொடுக்கக்கூடாது என்று தடை போடுகிறார். இடையர் குல மகளிர்கள் ராஜா சொன்னதை காதில்போட்டுக் கொள்வதில்லை. 'காஜி மாப்பிள்ளை'யின் திருமண நாளன்று ராஜாவின் தடையைப் பொருட்படுத்தாமல் அந்த மகளிர்கள் பால் எடுத்துச் செல்கின்றனர். அப்போதுதான் யசோ ராணியின் கணவர் நந்துவும், அவரைச் சார்ந்தவர்களும் ராஜா சோகல் டியோவால் தாக்கப்படுகிறார்கள். அவர்களின் குருதிதான் யசோ ராணி சுமந்து போன வாளியை நிரப்பியது.

இன்னொரு நாட்டுப்புறப்பாடலில் காஜிமியான் புனித நகரான பனாரசை வெற்றி கொள்கிறார். காஜிமியான் அந்நகருக்குள் நுழையும் போது ரத்தப்பலி கேட்கும் அவ்வூர் தெய்வமானது அவரால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக இறைவசனத்தை - கலிமாவை- சொல்லுகிறது. அதன்பிறகு ரத்தத்திற்கு பதிலாக அத்தெய்வத்தை பாலைக் குடிக்குமாறு செய்கிறார் காஜிமியான்.

காஜிமியானின் பிராதபங்களைக் கேள்விப்பட்ட பனாரசை ஆண்ட ராஜா பனார், தனது சோதிடர்களை அழைத்து காஜிமியானின் நுழைவை எப்படித் தடுப்பது என்று கலந்தாலோசிக்கிறார்.

அதற்கு, ‘ காஜி மியான் தெய்வத்தினாலேயே பாதுகாக்கப்படுகிறார் ’ என்று அந்த சோதிடர்கள் பதில் சொல்லுகிறார்கள் .

அதைக் கேட்டு அந்த ராஜா , காஜிமியானை மயக்கி தனது சூழ்ச்சி வலையில் விழவைப்பதற்காக காம இச்சையை தூண்டக்கூடிய அழகான யுவதிகளை, காஜிக்கும் அவர் படை வீரர்களுக்கும் முன்பாக நட க்கச் சொல்கிறார் . அந்த சதிச் செயலுக்காக அந்த நாட்டுப்புறப்பாடலிலுள்ள சில வரிகள் ‘வெட்கங்கெட்ட காபிர்’ என்றே அந்த மோசமான ராஜாவைத் திட்டுகின்றன .

ஆனால் தனது புலன்களை அடக்கப் பழகிய கன்னித்துறவியான காஜிமியானோ , அந்த அழகு மங்கையர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை . அது மட்டுமல்ல தனது தலையை வெட்டி பையில் போட்டுக்கொண்டே நிலையிலேயே அந்த ராஜாவுடன் போரிடுகிறார். போர் முடிந்த பின்பு மீண்டும் தனது தலையை மீண்டும் அவர் பொருத்திக் கொள்கிறார் காஜிமியான்.

ஆடம்பரங்களிலும் உடல் இச்சைகளிலும் ஊறித் திளைத்த வழமையான துருக்கிய ஆட்சியாளர்கள் போலல்லாமல் , வடக்கிந்தியாவை வெற்றி கண்ட முக்கியமான இஸ்லாமிய அரசராக , வீரப்புனிதராக காஜிமியான் தனது கன்னித்தன்மை கழியாத பிரம்மச்சாரியாக திருமணம் ஆகாமலே ‘பசுக்களைக் காக்க வேண்டி’ புனிதப் போர் செய்து உயிர் நீத்து விடுகிறார் .

மோசமான நோக்கத்துடன் பெண்களை அனு ப்பிவைத்ததன் மூலமாக இந்து ராஜாவும் ’வெட்கங்கெட்ட காபிர்’ என்று இந்த நாட்டுப்புறப்பாடலில் தரந் தாழ்த்தப்பட்டுவிடுகிறார் . இறைவனுக்கான சன்மார்க்கப் பாதையில் மேன்மையான காரணத்துக்காக ‘புனிதப்போரில்’ ஈடுபட்டு உயிர்துறப்பது என்பது இஸ்லாத்தில் விரும்பத்தகுந்த கரு த்தாகும். அந்த இஸ்லாமிய இலட்சியக் கருத்தானது இங்கு பசுக்களை காக்கவேண்டும் என்ற சத்திய ஆவேசமாக உருமாறியிருக்கிறது. இந்துக்களுக்காக உயிர்நீத்த காஜிமியானின் வீரமரணம் அவரின் நாட்டுப்புறப் பாடல்களை பாடும் பலநூறு நாவுகளிலும் , அதைக்கேட்டு நினைவுகொள்ளும் மனங்களிலும் அவர் மதரீதியாக ஓர் இஸ்லாமியர் என உறுத்தாமல் இலகுவாக ஏறியிருப்பது கவனங் கொள்ள வேண்டிய விஷயமாகும் .

இஸ்லாம் படையெடுத்து வெற்றிகொண்ட பின்பு , வெற்றிகொண்ட நிலத்தில் வசிக்கும் இஸ்லாமல்லாதவர்களிடம் இஸ்லாத்தை தழுவுகிறீர்களா ? அல்லது மரணத்தை ஏற்றுக்கொள்கிறீர்ளா? என்ற நிர்பந்தத்தைக் இஸ்லாம் மதம் கொடுக்கக்கூடியது என்பது இஸ்லாத்தைப் பற்றி தரப்படும் ஒரு படித்தான மாறாத சித்திரமாகும். அந்த நெருக்கடியின் சுவடே இந்த நாட்டுப்புறபாடலில் இல்லாமல் இருக்கிறது . ஆநிரை மேய்ப்பவர்கள் இஸ்லாத்திற்கு மதம் மாறிவிடவில்லை அல்லது இஸ்லாமி ய அரசின் குடிமக்களாக அவர்கள் ஆகிவிடவில்லை. ஆபத்பாந்தவராக கருதப்படும் காஜிமியானின் அரவணைப்பில் அவர்கள் அவரின் பக்தர்களாகிவிடுகின்றனர் .

‘வெளியிலிருந்து வந்த முஸ்லிம் ஆக்ரமிப்பாளர்களே நீங்கள் இந்து தர்மத்தையும் , பெண்களையும், செல்வங்களையும் சூறையாடினவர்கள் என் று முஸ்லிம்களின்மேல் வைக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கும் , இகலோகத்தில் கொள்ளையில் கிடைக்கப்போகும் பொருட்களுக்கும், மறுமையில் சொர்க்கத்தில் அடையப் போகும் சௌகரியங்களுக்கும் பெண்களுக்கும் ஆசைப்பட்டு போர்களத்தில் உயிர்துறக்க ஆசைப்படுபவர்கள் என்று முஸ்லிம்கள் பற்றி கட்டமைக்கப்பட்ட பிம்பத்துக்கும் , நேரெதிராக இருக்கிறது காஜிமியானின் வரலாறு .

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆர்ய சமாஜிகள் காஜிமியானை வழிபடும் இடைசாதி மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் ‘அறியாமையை’ போக்குவதற்கு காஜிமியான் ஓர் கொடுங்கோன்மையான முஸ்லிம் அரசர் என் பதை எழுத்துப் பூர்வமாக துண்டுப் பிரசுரங்கள் வழியாக வெளியிட்டு அவர் சமாதிக்குச் பக்தர்கள் செல்லவேண்டாம் என்று தடுத்துப் பார்த்தனர் . அவ்விதமான முயற்சிகளினால் பக்தர்களின் போக்கைத் தடுக்க

இயலவில்லை. பக்தர்கள் ஒன்றும் அறியாதவர்கள் என்பது செல்லுபடியாகாத வாதம் . பக்தர்களுக்கு 'காஜி' என்பதன் அர்த்தம் தெரியாவிட்டாலும் அவர் ஒரு முசல்மான் என்பது தெரியும். டஃபாலி இசைப்பாணர்கள் இந்துக்கள் அல்ல என்பதும் தெரியும் . பஹ்ரெய்ச்சில் இருப்பது கோயிலல்ல , அது தர்ஹா என்பதும் தெரியும் .
காஜிமியானின் வரலாறு நமக்குப் பரிச்சயமான 'வாளோடு வந்தது இஸ்லாம் ' என்றவரலாற்றை தலைகீழாக மாற்றிப் போடுவதாய் இருக்கிறது . புதிய பார்வையை உருவாக்குவதாக இருக்கிறது. காஜிமியானின் தர்ஹா தொழுநோயை குணப்படுத்துவதில் புகழ்பெற்றது. பிள்ளைப் பேறில்லாதவர்களும், பேய் பீடித்தவர்களும் அவரின் தர்ஹாவுக்குச் செல்கிறார்கள். சக்கரவர்த்தியான அக்பர் (1542) தனது காலத்தில் காஜி மியானுடைய தர்ஹாவின் புகழ் டில்லிவரை எட்டியிருந்ததை குறிப்பிட்டுள்ளார் . அப்படி மதநல்லிணக்கத்தை சாத்தியப்படுத்தக் கூடிய இடமாக மட்டும் காஜிமியானின் தர்ஹா இருந்துவிடவில்லை.
அதையும் தாண்டிய நிலையில் , துருக்கிய படையெடுப்பாளர்கள் வடக்கிந்தியாவின் மீது படையெடுத்து வந்து வென்றதை அவரைப்பற்றிய புனித வரலாறுகள் வேறொரு மாற்றுப் பார்வையுடன் சொல்கின்றன. வரலாறு எழுதுபவர்கள் மக்களிடம் உயிர்ப்புடன் இருக்கும் இம்மாதிரியான நாட்டார் வரலாறுகளையும் விட்டுவிடாமல் கணக்கில் கொண்டு எ ழுதும் போதுதான் ஆரோக்கியமான சமூகப் பார்வை உருவாகும் என்கின்றனர் நவீன வரலாற்றாய்வாளர்கள்.

## உதவிய நூல்கள்


Romila Thapar, Somanatha, Viking Penguin books 2004

Shahid Amin, On Retelling the Muslim Conquest of North India - Partha Chatterjee,Anjan Ghosh (Eds) History and the present, Permanent Black,Delhi (1996)

Kaushik Basu, Sanjay Subramanyam (Eds), Unravelling the Nation, Penguin books (2002)